IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.108/2020
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா.1 சாட்சி சுலோச்சனா க.பெ.ஜெயராம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 19.09.2024 in accordance with the provisions of Act XX141.**

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. என்னுடைய பெற்றோர் பெயர் கொண்டசாமி நாயக்கர், மற்றும் பாப்பம்மாள் ஆகும். எனது பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4பிள்ளைகள் ஆகும். அதில் 2 பிள்ளைகள் சிறுவயதில் இறந்துவிட்டார்கள். 4 பிள்ளைகள் பெயர்கள் என்னவென்றால் சுலோச்சனா ஆகிய நான் மற்றும் எனது சகோதரர் பெயர் தவமணி மற்ற இருவர் பெயர் சரியாக நினைவில்லை.

2. தாவாச் சொத்து எனது தந்தையாருக்கும் அவரது சகோதரருக்கும் இடையே 1984ல் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தந்தையார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 30 வருடம் இருக்கும். எனது தாயார் 20.9.2017ல் இறந்தார் என்றால் தேதி நினைவில்லை 2017ல் இறந்தார்.

3. தாவா சொத்து எனது தந்தையின் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் எனக்கு மட்டுமே பாத்தியம். நான் தான் எனது அப்பாவை பராமரித்து வந்தேன் அதனால் எனக்குதான் பாத்தியம். எனது தந்தையாரின் வாரிசு

சான்றிதழை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். எனது தாயாரின் வாரிசு சான்றிதழை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

4. 1ம்பிரதிவாதி மாண்புமிகு திருமங்கலம், சார்பு நீதிமன்றத்தில் எனக்கெதிராக அசல் வழக்கு எண்.1069/2017 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அது எனக்கு ஆதரவாக தீர்ப்பாகியது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து தீர்ப்பு பகரப்படும்வரை எனது தாயாரின் வாரிசு சான்றிதழை நான் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல்வழக்கில் எனது பெற்றோரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வாதியாக இருந்த 1ம்பிரதிவாதியும் மேற்படி வாரிசு சான்றிதழை வாங்காமல் வழக்கை நடத்தினார் என்றால் சரியல்ல.

5. மேற்படி அசல்வழக்கின் தீர்ப்பு 19.10.2019-ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் நினைவில்லை. மேற்படி தீர்ப்புக்கு பின்பு 23.10.2019ல் எனது தாயாரின் வாரிசு சான்றிதழை வருவாய்துறையினரால் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வாரிசு சான்றிதழில் எனது தாயார் பாப்பம்மாளின் வாரிசாக சுலோச்சனா ஆகிய நான், 1ம்பிரதிவாதி பாப்பா, மற்றும் தவமணி ஆகிய 3பேரும் வாரிசுகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது.

6. நான் இந்நீதிமன்ற இ.ம.எண்.3/2020 உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு திருமங்கலம், சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு CMA No.6/2021 தாக்கல் செய்தேன் என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்திருப்பார். மேற்படி மேல்முறையீட்டு மனுவில் 1ம்பிரதிவாதி வாரிசு சான்றிதழை மோசடியாக பெற்றுள்ளார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரியாது.

7. 23.10.2019ம் தேதி வாரிசு சான்றிதழ் பெற்றபின்புதான் 1ம்பிரதிவாதியின் பெயர் முறையாக தாவாச் சொத்திற்குரிய பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாவாச் சொத்து பட்டாவில் உள்ள 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரை நீக்கம்செய்து இரத்து செய்யவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் எனது தாயார் பாப்பம்மாளின் வாரிசு 1ம்பிரதிவாதி இல்லையென்றால் எனது தாயாரின் வாரிசு சான்றிதழில் இருந்து 1ம்பிரதிவாதி பெயரை நீக்கம் செய்யவேண்டி மேல்முறையீடு வருவாய்துறையில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் 1ம்பிரதிவாதி எனது பெற்றோரின் வாரிசு இல்லை என்று, விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

9. 1ம்பிரதிவாதி எனது பெற்றோரின் வாரிசு இல்லை என்று, விளம்புகை பரிகாரம் கேட்காத நிலையில் இவ்வழக்கில் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது அக்கா பாப்பா (எ) அழகம்மாள் என்றால் சரியல்ல அழகம்மாள்தான். எனது அக்கா அழகம்மாள் எங்கிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அழகம்மாள்

எங்கிருக்கிறார் என்ற விபரம் தெரியாத நிலையில் எனது பெற்றோருக்கு நான்மட்டுமே வாரிசு என்று பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல.

10. எனது சகோதரி அழகம்மாளை காணவில்லை என்று நான் காவல்நிலையத்தில் புகார் செய்தேனா என்றால் நான் சிறுவயதில் இருந்ததால் எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதி என் சகோதரி என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி எனது சகோதரியே இல்லை என்பது உரிய கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரை விசாரித்தால் தெரியும் என்றால் சரியல்ல.

11. எனது தந்தைக்கு 2 சகோதரர்கள் மற்றும் 4 சகோதரிகள் உள்ளார்கள் என்றாலும், அவர்கள் குருசாமி நாயக்கர், அழகர்சாமிநாயக்கர் (எ) ஏட்டுநாயக்கர், பெரியகுருவம்மாள், சின்னகுருவம்மாள், சுப்பம்மாள் (எ) நண்டுகிளவி, ஆறுமுகம் என்றால் சரிதான். எனது சித்தப்பாக்கள் எனது அத்தைகளின் பிள்ளைகளை திருமணம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

12. மேற்படி குருசாமி நாயக்கருக்கு அழகர்சாமி என்ற மகன் உண்டு என்றால் சரிதான். மேற்படி அழகர்சாமிதான் அசல்வழக்கு எண். 1069/2017–ல் வழக்கில் 1ம்பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியமளித்தார் என்றால் சரிதான். மேற்படி அழகர்சாமிக்கு அழகுலட்சும், அழகுசுந்தரி என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் திருமணமாகி குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களிடம் எனக்கு விரோதம் இல்லை என்றால் சரிதான்.

13. எனது சித்தப்பா அழகர்சாமி (எ) ஏட்டுநாயக்கருக்கு 3ஆண்குழந்தைகள், 4பெண்குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

அவர்களின் பெயர்கள் இராஜகோபால், அழகர்சாமி, சுப்பாராஜ் (எ) சின்னதம்பி, ஜெயக்கொடி, சுப்புலட்சுமி, சாந்தி, பாப்பாத்தி ஆகியோர் என்றால் தெரியாது.

14. எனது அத்தைகளுக்கு குழந்தைகள் இருந்து அவர்களுக்கு திருமணம் செய்து பேரன், பேத்தி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம்பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி அல்ல என்றும், கொண்டசாமிநாயக்கர், மற்றும் பாப்பம்மாளின் மகள் அல்ல என்று மேற்படி எனது உறவினர்கள் எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வருவார்கள்.

15. எனது அத்தை சுப்பமாளின் மகன் அழகர்சாமியைதான் 1ம்பிரதிவாதி திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். அழகர்சாமிக்கும், 1ம்பிரதிவாதிக்கும் பிறந்த குழந்தை இலட்சுமி என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி 1975ல் குருசாமி என்பவரை திருமணம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி குருசாமிக்கும், 1ம்பிரதிவாதிக்கும் 3 குழந்தைகள் முருகன், பழனியம்மாள், சித்ராதேவி ஆகியோர்கள் உள்ளார்கள் என்றால் தெரியாது.

16. மேற்படி முருகனுக்குதான் 1ம்பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஒருபாக அளவு தானபத்திரம் மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் அது மோசடியானது. நான் எனது பிராதில் 1ம்பிரதிவாதி பட்டா மற்றும் வாரிசு சான்றிதழ் இடைத்தரகர் மூலமாக பெற்றுள்ளதாக கூறிய நிலையில் மேற்படி இடைத்தரகர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

17. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணம் எனது தாயார் பாப்பம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரம் என்றால் சரிதான். கொண்டுசாமி நாயக்கருக்கு வாரிசுகளாக 1ம்பிரதிவாதி இருக்கும்போது எனது தாயார்

தன்னிச்சையாக எனக்கு எனது தந்தையின் சொத்தை பொறுத்து தானபத்திரம் எழுதிவைக்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது எனது தந்தையின் வாரிசு சான்று இணைக்கப்படவில்லை என்றால் தெரியாது.

18. மேற்படி எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் இல்லாமல் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதால் அது செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமானது 1ம்பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பாகத்தில் ஒரு பகுதியை 2ம்பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தில் 1/2பாகம் உள்ளது என்பதால் வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல.

19. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது எனது தாயாருக்கு 97 வயது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட 6மாதத்திற்குள் எனது தாயார் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்தது 20.9.2017என்றும் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது 20.3.2015 என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது தாயாரின் வயதுமூப்பினை பயன்படுத்தி மோசடியாக ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

20.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம்பிரதிவாதிக்கும், எனக்கும் பாகப்பிரிவினையின் அடிப்படையில் கிடைத்த சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தை குருசாமியின் மனைவி 1ம்பிரதிவாதி பாப்பா எழுதிக்கொடுத்ததாக உள்ளது

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயார் பாப்பா எழுதிக்கொடுத்ததாக இல்லை என்றால் சரியல்ல.

21. 1ம்பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுக்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கொண்டுச்சாமி மனைவி பாப்பம்மாள் என்று உள்ளதால் மட்டும் எனது தாயார் பாப்பம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் எனது தாயார் இறந்ததற்கு பிறகு என் தாயார் பெயரிலும், என் பெயரிலும் மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

22. வா.சா.ஆ.5 ஆவணம் எனது தாயார் இறந்ததற்கு பின்பு நடந்த பரிவர்த்தனை பற்றி குறிப்பிடுகிறது என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணம் நான் வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றால் எனது தாயார் உயிருடன் இருக்கும்போது ஏற்படுத்திய ஆவணம். மேற்படி வா.சா.ஆ.6 வழக்குச் சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்பதை காட்டக்கூடிய ஆவணமாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.6 எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் இல்லாமல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

23. மேற்படி வா.சா.ஆ.6 அ.வ.எண்.1069/2017 என்ற வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டது என்றால் நினைவில்லை. மேற்படி எனது தரப்பு ஆவணங்கள் தவறானது என்பதால்தான் 1ம்பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.வ.எண்.1069/2017 என்ற வழக்கில் நான் நீதிமன்றத்தில் கூண்டுஏறி சாட்சியமளிக்கவில்லை என்றால்

சரியல்ல. மேற்படி வழக்கில் எனது சார்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

24. வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்டுள்ள நானும், எனது பிள்ளைகளும் ஏற்படுத்திக்கொண்ட பரிவர்த்தனைகள் செல்லாது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி எனது சகோதரி இல்லை என்று நான் கூறுவதால் என்னை மரபணு சோதனைக்கு உட்படுத்த தயாராக உள்ளேனா என்றால் என்னை உட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

25. அ.வ.எண்.1069/2017 என்ற வழக்கிற்கு பின்னிட்டு வழக்குச் சொத்தில் விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் பாதி அனுபவம் 1ம்பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு அனுபவம் உள்ளதால்தான் இ.ம.எண்.2/20ல் மேல்முறையீடு செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அதற்கு மாறாக இ.ம.எண்.3/20–ல் மட்டும் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

26. 1ம்பிரதிவாதி போலியான கோப்புகளை வைத்து பட்டா பெயர்மாற்றம் செய்ததாக கூறியநிலையில் மேற்படி போலியான கோப்புகள் எது என்றாலும் அதன் நகல் என்வசம் உள்ளதா என்றாலும் தவறாகத்தான் வாங்கியுள்ளார்கள். என்மீது இராஜபாண்டி என்பவர் அ.வ.எண்.647/2017 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம்பிரதிவாதி தனது பாகத்தை விடுப்பு செய்யவில்லை என்று நான் எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

27. 1ம்பிரதிவாதி எனது சகோதரியாக இருக்கலாம் என்ற சந்தேகம் எனக்குள்ளதா என்றால் அவ்வாறான சந்தேகம் எனக்கு இல்லை. 8.7.2020ம்

தேதியில் நான் எங்கிருந்தேன் என்றால் நான் என் வீட்டில்தான் இருந்தேன். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் 1 மற்றும் 2ம்பிரதிவாதிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

28. 17.7.2020ல் 1 மற்றும் 2ம்பிரதிவாதிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பட்டா பெயர்மாற்றம் தவறாக உள்ளது குறித்து தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் நினைவில்லை. எனது தாயார் பாப்பம்மாளின் வாரிசாக 1ம்பிரதிவாதியும், சேர்க்கப்பட்டு கொடுக்கப்பட்ட வாரிசுசான்றிதழை பொறுத்து நான் மேல்முறையீடு செய்யாத நிலையில் நான் வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.